திருப்பூர் மாவட்டம்

Register No.

**10 P**

# முதல் திருப்புதல் தேர்வு – 2024

நேரம் : 3.00 மணி

## சமூக அறிவியல்

மதிப்பெண்கள் : 100

### பகுதி – I

14 x 1 = 14

**சரியான விடையைத் தேர்வு செய்யவும்.**

1. ''ஏகாதிபத்தியம் முதலாளித்துவத்தின் உச்சகட்டம்'' எனக் கூறியவர் யார்?
அ) லெனின் ஆ) மார்க்ஸ் இ) சன்யாட் சென் ஈ) மாசே துங்
2. ஜெர்மனியோடு மியூனிச் உடன்படிக்கையில் கையெழுத்திட்ட பிரிட்டன் பிரதமர் யார்?
அ) சேம்பர்லின் ஆ) வின்ஸ்டன் சர்ச்சில் இ) லாயிட் ஜார்ஜ் ஈ) ஸ்டேன்லி பால்டுவின்
3. ''ராஸ்ட் கோப்தார்'' யாருடைய முழக்கம்?
அ) பார்சி இயக்கம் ஆ) அலிகார் இயக்கம் இ) இராமகிருஷ்ணர் ஈ) திராவிட மகாஜன சபை
4. சிவசுப்ரமணியனார் எங்கு தூக்கிலிடப்பட்டார்?
அ) கயத்தாறு ஆ) நாகலாபுரம் இ) விருப்பாட்சி ஈ) பாஞ்சாலங்குறிச்சி
5. சரியான கூற்றைத் தேர்வு செய்யவும்.
i) சென்னைவாசிகள் சங்கம் 1852 இல் நிறுவப்பட்டது. ii) தமிழில் வெளிவந்த தேசியப் பருவ இதழான சுதேசமித்திரன் 1891 இல் தொடங்கப்பட்டது iii) குடிமைப்பணித் தேர்வுகள் இந்தியாவில் மட்டுமே நடத்தப்படவேண்டுமென சென்னை மகாஜன சபை கோரியது iv) V.S. சீனிவாசனார் ஒரு தீவிர தேசியவாதியாவார்.
அ) (i) மற்றும் (ii) ஆகியவை சரி ஆ) (iii) மட்டும் சரி இ) (iv) மட்டும் சரி ஈ) அனைத்தும் சரி
6. பீகாரின் துயரம் என்று அழைக்கப்படும் ஆறு.........
அ) நர்மதா ஆ) கோதாவரி இ) கோசி ஈ) தாமோதர்
7. கேரளா மற்றும் கர்நாடக கடற்கரைப் பகுதிகளில் விளையும் மாங்காய்கள் விரைவில் முதிர்வதற்கு.........காற்றுகள் உதவுகின்றன. அ) லூ ஆ) நார்வெஸ்டர்ஸ் இ) மாஞ்சாரல் ஈ) ஜெட் காற்றோட்டம்
8. .........என்பது ஒரு வாணிபப் பயிர். அ) பருத்தி ஆ) கோதுமை இ) அரிசி ஈ) மக்காச்சோளம்
9. இந்தியாவில் முதல் அணு மின் நிலையம் நிறுவப்பட்ட மாநிலம்
அ) குஜராத் ஆ) இராஜஸ்தான் இ) மகாராஷ்டிரம் ஈ) தமிழ்நாடு
10. கீழ்க்கண்டவற்றில் அரபிக்கடலில் கலக்கும் ஆறு எது?
அ) பெரியார் ஆ) காவிரி இ) சிற்றார் ஈ) பவானி
11. பின்வருவனவற்றுள் எந்த உரிமை Dr. B.R. அம்பேத்கர் அவர்களால் 'இந்திய அரசியலமைப்பின் இதயம் மற்றும் ஆன்மா' என விவரிக்கப்பட்டது.
அ) சமய உரிமை ஆ) சமத்துவ உரிமை இ) அரசியலமைப்புக்குட்பட்டு தீர்வு காணும் உரிமை ஈ) சொத்துரிமை
12. ஆளுநர் யாரை நியமனம் செய்வதில்லை?
அ) முதலமைச்சர் ஆ) மாநில அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் தலைவர் இ) மாநில தலைமை வழக்கறிஞர் ஈ) உயர்நீதிமன்ற நீதிபதிகள்
13. கீழ்கண்டவற்றுள் எது வர்த்தக கொள்கை? அ) நீர்பாசன கொள்கை ஆ) இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கொள்கை இ) நில சீர்திருத்தக் கொள்கை ஈ) கூலிக் கொள்கை
14. சேமிப்பு கிடங்கு என்பது உணவு தானியங்கள். கோதுமை மற்றும் அரிசியை .............நிறுவனம் மூலம் அரசாங்கம் கொள்முதல் செய்கிறது.
அ) FCI ஆ) நுகர்வோர் கூட்டுறவு இ) ICICI ஈ) IFCI

### பகுதி – II

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். 28–வது வினாவிற்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

10 x 2 = 20

15. ஐரோப்பிய போர்க்குணம் வாய்ந்த தேசியவாதத்தின் மூன்று வடிவங்கள் எவை?
16. பிரெட்டன் உட்ஸ் இரட்டையர்களின் பெயர்களைக் குறிப்பிடுக.
17. பிரம்ம சமாஜத்தால் ஒழிக்கப்பட்ட சமூகத் தீமைகள் யாவை?
18. தன்னாட்சி (ஹோம் ரூல்) இயக்கத்தின் குறிக்கோள்களை விவரிக்கவும்.



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.TrbTnpsc.com

19. திருநெல்வேலி எழுச்சி பற்றி ஒரு குறிப்பு வரைக.
20. இந்திய திட்டநேரத்தின் முக்கியத்துவம் பற்றிக் கூறுக.
21. 'பருவமழை வெடிப்பு' என்றால் என்ன?
22. இந்தியாவில் சணல் உற்பத்தி செய்யும் முக்கிய பகுதிகளைக் குறிப்பிடுக.
23. பேரிடர் அபாய நேர்வு குறைப்பு – வரையறு.
24. நீதிப்பேராணை என்றால் என்ன?
25. மாநில ஆளுநரின் முக்கியத்துவம் யாது?
26. தனி நபர் வருமானம் என்றால் என்ன?
27. FAO வின்படி உணவு பாதுகாப்பை வரையறு.
28. பெரியார் ஏன் "வைக்கம் வீரர்" என அறியப்பட்டார்?

பகுதி – III

**எவையேனும் 10 வினாக்களுக்கு விடையளிக்கவும். வினா எண்.42 க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.** 10 x 5 = 50

29. கோடிட்ட இடங்களை நிரப்புக.
    1) நவீன சீனாவின் தந்தை என்று அழைக்கப்படுபவர்............ஆவார்.
    2) சோட்டா நாக்பூர் சட்டம் நிறைவேற்றப்பட்ட ஆண்டு...........
    3) சாத்தனூர் அணை...........ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ளது.
    4) இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் பாதுகாவலன்............ஆகும்.
    5) சிறப்புப் பொருளாதார மண்டலக் கொள்கைகள்.............ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
30. ஜெர்மனியுடன் தொடர்புடைய வெர்செய்ல்ஸ் உடன்படிக்கையின் சரத்துக்களை கோடிட்டுக் காட்டுக.
31. கிழக்கிந்திய கம்பெனியாரை எதிர்த்து கட்டபொம்மன் நடத்திய வீரதீரப் போர்கள் பற்றி ஒரு கட்டுரை வரைக.
32. காந்தியடிகளை ஒரு மக்கள் தலைவராக உருமாற்றம் செய்ய உதவிய காரணிகள் என்ன என்று ஆராயவும்.
33. சட்டமறுப்பு இயக்கத்தில் தமிழ்நாடு வகித்த பங்கினை விவரி.
34. இந்திய காடுகள் பற்றி விவரிக்கவும்.
35. அ) வேறுபடுத்துக. 1) மேற்குத் தொடர்ச்சி மலைகள் மற்றும் கிழக்குத் தொடர்ச்சி மலைகள்
    2) உள்நாட்டு வணிகம் மற்றும் பன்னாட்டு வணிகம்
    ஆ) காரணம் கூறுக. கிராமங்களைவிட பெருநகரங்களில் மக்கள் தொகை அதிகம்
36. பல்நோக்கு திட்டம் என்றால் என்ன? ஏதேனும் இரண்டு இந்திய பல்நோக்கு திட்டங்கள் பற்றி எழுதுக.
37. அடிப்படை உரிமைகளுக்கும், அரசு நெறிமுறையுறுத்தும் கோட்பாடுகளுக்கும் இடையேயான வேறுபாடுகளைக் குறிப்பிடுக.
38. அணிசேரா இயக்கம் பற்றி விரிவான குறிப்பு எழுதுக.
39. உலகமயமாக்கலின் சவால்களை எழுதுக.
40. வெற்றிகரமான தொழில்துறை தொகுப்புகளின் முக்கிய பண்புகள் யாவை?
41. கீழ்காண்பனவற்றிற்கு காலக்கோடு வரைக.
    1910 முதல் 1930 வரையிலான ஆண்டுகட்கு உட்பட்ட இந்திய நிகழ்வுகளை காலக்கோட்டில் எழுதுக.
42. இந்திய வரைபடத்தில் பின்வரும் இடங்களைக் குறிக்கவும்.
    1) ஜாலியன்வாலாபாக் 2) சௌரிசௌரா 3) கல்கத்தா 4) வேதாரண்யம் 5) தண்டி

பகுதி – IV

**பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்கவும்** 2 x 8 = 16

43. அ) இராமலிங்க சுவாமிகளின் வாழ்க்கை மற்றும் போதனைகள் பற்றி விளக்குக. **(அல்லது)**
    ஆ) இந்தியாவின் சாலைகளை வகைப்படுத்தி விளக்குக.
44. அ) கொடுக்கப்பட்டுள்ள இந்திய வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.
    1) பாமீர் முடிச்சு 2) காரகோர மலை 3) பசுமை மாறாக் காடுகள் 4) தக்காண பீடபூமி 5) ரான் ஆப் கட்ச்
    6) சென்னை 7) சிலிக்கா ஏரி 8) கூடன்குளம் அணுமின் நிலையம்
    **(அல்லது)**
    **ஆ) கொடுக்கப்பட்டுள்ள தமிழ்நாடு வரைபடத்தில் கீழ்க்காணும் இடங்களைக் குறிக்கவும்.**
    1) மன்னார் வளைகுடா 2) சேலம் 3) நீலகிரி 4) வங்காள விரிகுடா 5) பறவைகள் சரணாலயம் ஒன்று
    6) நெல்விளையும் பகுதி ஒன்று 7) எண்ணூர் துறைமுகம் 8) மாங்குரோவ் காடுகள்



Kindly send me your answer keys to us - padasalai.net@gmail.com